**செய்தி வெளியீடு எண்: 444** **நாள்: 10.07.2018**

## பத்திரிக்கை செய்தி

**2018**ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின்போது பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த சமூக சேவகர் மற்றும் தொண்டு நிறுவனத்திற்கான விருதுகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிபுரிந்து, மகளிர் நலனுக்கு தொண்டாற்றும் வகையில் தொடர்ந்து பணியாற்றும் சமூக சேவகர் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற சமூக சேவை நிறுவனமாக இருத்தல் வேண்டும். தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் வரும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாநில அளவிலான உயர் மட்டக்குழு விண்ணப்பங்களை பரிசீலனை செய்து விருதுக்கு தகுதியான தனி நபர் மற்றும நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும். விண்ணப்பதாரரின் கருத்துரு (Booklet-2) (தமிழ்–1 மற்றும் ஆங்கிலம்–1) மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் பெறப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பம் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள் ஆகியவை tnsocialwelfare.org என்ற இணையதள முகவரியில் காணலாம். எனவே அனைத்து மாவட்டங்களிலும் பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த சமூக சேவகர் மற்றும் தொண்டு நிறுவனங்கள், சம்மந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களை நேரில் அணுகி வருகின்ற 20.07.2018க்குள் கருத்துருக்களை சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**